**Starting time 03.30 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.234/2019**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 02.09.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சுசீலா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>5-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** தாவா சொத்து எந்த புல எண்ணில் அமைந்துள்ளது என்றால், புல எண். 163/3. அதில் மொத்தம் 812 ½ ச.அடி உள்ளது என்றால், ஆமாம். அந்த சொத்து ஆரம்பத்தில் எத்தனை பேருகளுக்கு பாத்தியப்பட்டது என்றால், 5 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. மூக்கப்படையாட்சி, ராமசாமி, கிருஷ்ணபடையாட்சி, பொன்னுசாமி படையாட்சி, அழகப்படையாட்சி ஆகிய குடும்பங்களுக்கு பாத்தியப்பட்டது. அதில் எனக்கு எத்தனை பங்கு உள்ளது என்றால், 3 பங்கு.

2. அழகப்படையாட்சி, பொன்னுசாமி படையாட்சியும் அவரது பங்கை கிருஷ்ண படையாட்சியின் மனைவி தெய்வாணையம்மாளுக்கு விற்றுவிட்டார்கள். அவர்களிடம் இருந்து நான் 3 பங்கையும் வாங்கினேன். அவர் வாங்கிய பங்கையும், அவர்களக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட பங்கையும் 3 பங்காக நான் வாங்கிவிட்டேன் என்றால், ஆமாம். மீதமுள்ள 2 பங்கில் 1 பங்கு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால், ஆமாம். மீதி 1 பங்கு 5-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால், ஆமாம்.

3. 1 முதல் 3 பிரதிவாதிகள் தங்களுக்கு 3-ல் 1 பங்கு இருப்பதாக குறிப்பிட்டு 26.09.201 தேதியன்று குறிப்பிட்டு 4-ஆம் பிரதிவாதிக்கு ஒரு கிரய பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்றாலும், அது செல்லத்தக்கதல்ல என்றாலும், ஆமாம். அந்த 5-ஆம் பிரதிவாதிக்கு 5 ல் ஒரு பாகம் இன்னும் உள்ளது என்றால், ஆமாம்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 03.36 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**